செய்தி வெளியீட்டு எண்.153 நாள்: 16.2.2010

## பெரியகுளம் அருகே சாலை விபத்தில் உயிரிழந்த 10 பேரின் குடும்பங்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாய் ; காயம் அடைந்தவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 12 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் கிராமத்தில் வைகை அணையிலிருந்து தேவதானப்பட்டி செல்லும் சாலையில் விவசாயக் கல்லூரி அருகே 25 பெண்களுடன் தேனி மருத்துவமனைக்கு சென்றுவிட்டு தேவதானப்பட்டிக்கு வந்து கொண்டிருந்த மகேந்திரா டெம்போ ஜீப் வாகனத்தின் பின்புறத்தில், கிரஷர் டஸ்ட் ஏற்றிக் கொண்டு வந்த டிப்பர் லாரி மோதியதில் டெம்போவில் பயணம் செய்த 25 பெண்களில், 7 பெண்கள் சம்பவ இடத்திலும், மருத்துவ மனையில் உடனடி சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டபின், அவ்விபத்தில் காயம் அடைந்த 14 பெண்களில் சிகிச்சை பலனின்றி மேலும் 3 பெண்களும் ஆக மொத்தம் 10 பேர் இறந்துள்ளனர். இந்தக் கொடிய விபத்தில்

சுப்பையா என்பவரின் மனைவி ராஜேஸ்வரி,
இராஜேந்திரன் என்பவரின் மனைவி வேலுத்தாய்,
பாலமுருகன் என்பவரின் மனைவி தங்கேஸ்வரி,
தங்கவேல் என்பவரின் மனைவி சரோஜா,
பரமசிவம் என்பவரின் மனைவி செல்வி,
இரவி என்பவரின் மனைவி பாண்டியம்மாள்,
சந்திரசேகர் என்பவரின் மனைவி இலட்சுமி,
பாலு என்பவரின் மனைவி பஞ்சவர்ணம்,
முருகேசன் என்பவரின் மனைவி அமுதவல்லி,
ஜஹாங்கீர் என்பவரின் மனைவி ராபியா

ஆகிய 10 பேரும் உயிரிழந்ததுடன், 12 பெண்கள் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்ற விவரங்களும் தமது கவனத்திற்கு வந்ததும் மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும், காயமடைந்தவர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயிரிழந்தவர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 1 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 10 இலட்சம் ரூபாயும்; காயம் அடைந்தவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயும், ஆக மொத்தம் 12 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (16.2.2010) ஆணையிட்டுள்ளார்

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.